செய்தி வெளியீடு எண்: 50 நாள் : 16.01.2011.

# 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளுக்குரிய சின்னத்திரை விருதுகளுக்குத் தகுதியானவர்களைத் தேர்வு செய்திட தேர்வுக் குழு! முதலமைச்சர் கலைஞர் ஆணை!

சின்னத்திரைக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் திட்டம் 2006இல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த பிறகு அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து, 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு அரசு சின்னத்திரைக்கான சிறந்த தொடர்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர் விருதுகளுக்குத் தகுதியானவர்களைத் தேர்வு செய்திட,

மாண்புமிகு ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.சண்முகம் அவர்களது தலைமையில்,

இயக்குநர் திரு.விடுதலை,

எழுத்தாளர் திரு.அஜயன் பாலா,

கதாசிரியர் திரு.கண்மணிசுப்பு,

தயாரிப்பாளர் திரு.டி.வி.சங்கர்,

நடிகர், ஒளிப்பதிவாளர், இயக்குநர் திரு.ராஜசேகர்,

நடிகை திருமதி நித்யா ரவீந்தர், ஆகியோரை அலுவல்சாரா உறுப்பினர்களாகவும்,

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர்,

செய்தி–மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்,

செய்தி–மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு),

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர்,

ஆகியோரை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும் கொண்ட தேர்வுக் குழுவினை அமைத்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.